DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No.30/2022 |
| Police Station | Thiruppachethi P.S |
| Deposition of Witness for | LW.7 /PW.8 |
| Name | மலைச்சாமி |
| Father's Name | அழகர் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A2, A3 Absent. Petition filed and allowed. A1 Accused Present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 04.12.2023 at 11.00a.m

**முதல் விசாரணை:**

நான் ஆவரங்காடு கிராமத்தில் வசிக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 மற்றும் 1ம் எதிரி எனது பக்கத்துவீட்டில் குடியிருக்கிறார்கள். அவர்களுக்குள் என்ன பிரச்சனை ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தின் அருகில் நான் வீடு கட்டிக்கொண்டிருந்தேன். ஆனால் சம்பவம் நடந்த அன்று சம்பவ இடத்தில் இல்லை. 2 கி.மீ தள்ளி குடியிருந்தேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ் சாட்சியாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு சதகமாக சாட்சி சொல்லாததினால் அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் ஆவணங்களை பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது:-**

போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் தான் சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் காயம்பட்ட அ.சா.2 லெட்சுமியை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் ஏற்பட்ட பிரச்சனை தெரியும் என்றும் கூறிவிட்டு தற்பொழுது அ.சா.1 மற்றும் 1ம் எதிரி தனது பக்கத்துவீட்டில் குடியிருந்ததாகவும் அவர்களுக்குள் என்ன பிரச்சனை ஏற்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும்

சம்பவ இடத்தின் அருகில் தான் வீடு கட்டிக்கொண்டிருந்தேன் என்றும் ஆனால் சம்பவம் நடந்த அன்று சம்பவ இடத்தில் இல்லை, 2 கி.மீ தள்ளி குடியிருந்தேன் என்றும் சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**